மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த வருவாய் பிரிவினர்க்கு 134 வீடுகள் கட்டப்படும். அதிலே நெசவாளர்களுக்கும் வீடுகள் ஒதுக்கப்படும். ஆனால் நெசவாளர்களுக்கு ஒதுக்கீடுகள் செய்யப் படும் நேரத்திலே நெசவாளர்களுக்கு வேண்டிய நெசவு மேடை, தறிக்குழி ஆகியவற்றை அவர்களுடைய செலவிலே தான் அமைத்துக் கொள்ள வேண்டும். அதேபோல அரசு ஊழியர் களுக்கும் வீடுகள் கட்டப்படும்.

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தால் வீடுகள் கட்டப்படுகிறபோது எந்தெந்த ஊர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதென்று ஏதாவது வரைமுறை இருக்கிறதா? அப்படியென்றால் விழுப்புரத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

திருநெல்வேலி மாவட்ட பத்திரிகைத் துறை

ஊழியர்களுக்கான வீடுகள்.

112—(* வினா எண். 18887) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்; திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் வீட்டுவசதி வாரியத் தால் கட்டப்பட்ட வீடுகளில் சிலவற்றை அரசாங்க ஒதுக்கீட்டு அடிப்படையில் திருநெல்வேலி மாவட்ட பத்திரிக்கைத் துறை ஊழியர்களுக்கு வீடு ஒதுக்கித் தருமாறு தொடர்ந்து கோரிக்கைகள் சமர்ப்பித்துள்ளார்களென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ&ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளில் சிலவற்றை அரசாங்க ஒதுக்கீட்டு அடிப்படையில் திருநெல்வேலி மாவட்ட பத்திரிக்கைத் துறை ஊழியர்களுக்கு வீடு ஒதுக்கித் தருமாறு கேட்கப்படுகிறது. வீட்டு வசதி வாரியத்தினுடைய பரிந்துரையை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு வீடுகள் அளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

1984 பிப்ரவரி 21]

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில் மிகவும் நலிந்துள்ள பத்திரிக்கை ஊழியர்களுக்கு வீடுகள் ஒதுக்கித் தருவது மிகவும் அவசியம். எனவே நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையிலே அவர்களுக்கு விரைவில் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு எத்தனை பேர்களுக்கு வீடுகள் வழங்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, பத்திரிக்கை துறையிலே பணியாற்றிக் கொண்டு இருக்கிற ஊழியர்கள் என்று சொல்கிற நேரத்திலே இன்றைக்கு நிருபர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்களுக்கு பல்வேறு இடங்களில் வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலி பொறுத்தவரையில் இப்போது கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற வீடுகளில் அரசு ஒதுக்கீட்டில் அவர்களுக்கு முதலில் இரண்டு வீடுகள் தரலாம் என்றும், அந்த வீடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் யாருக்கு பரிந்துரை செய்கிறார்களோ அவர் களுக்கு அளிக்கலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே இரண்டு வீடுகள் என்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கைகளுக்காவது அதிக மாக வழங்குவது தான் நியாயமாக இருக்கும். ஆகவே ஒதுக்கப்படுகிற வீடுகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டு மென்ற பத்திரிக்கையாளர்களின் கோரிக்கையையும், என்னுடைய கோரிக்கையையும் வைத்து, அதை பரிவோடு அரசு கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு சென்னையில் இருப்பவர்களுக்கு பிரச்னையை தீர்ப்பதற்கு என்ன என்ன ஏற்பாட்டை அரசு செய்யும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரிவோடு கேட்டு இருக்கிற காரணத்தால் பரிவோடு கவனிக்கவேண்டும் என்ற நிலையில் இருக்கிறோம். ஆனால் அவருக்குப் பரிவு நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். சென்னையிலே இருக்கிற ஊழியர்களாக இருந்தாலும் அல்லது வேறு எங்கே இருக்கும் ஊழியர்களாக இருந்தாலும் பரிவிலிருந்து கொஞ்சமும் தவறுவது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாரமங்கலம் ஒன்றியத்தில் பனைபொருள் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்.

113—(* வினா எண். 18206) திரு. செ. செம்மலை: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் ஒன்றியத்தில் பனை பொருள் பயிற்சி நிலையம் ஆரம்பிக்க எந்த இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது?